விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 003 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 07 வியாழக்கிழமை (22.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## யாழ்.மாநகர சபையின் 'பட்ஜெட்' தோல்வி

### ஈ.பி.டி.பி வெளிநடப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏழு மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

11

## பளையில் இ.போ.ச விபத்து

### ஒருவர் உயிரிழப்பு; சிறுவர்கள் பெண்கள் உட்பட 17 பேர் படுகாயம்



(பளை)

பளை முள்ளையடிப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த அரச பேருந்து விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் சிறுவர்கள், பெண்கள் உட்பட 17 பேர்

11

# தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு

- 5 தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிப்பதற்கு இணக்கம்.
- தேசிய பாதுகாப்பு சபை கூடிய பின் சில காணிகளை விடுவிப்பது தொடர்பில் முடிவு.
- அரசியலமைப்பு தொடர்பில் கலந்துரையாட இணக்கம்.

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான இந்தச் சந்திப்பில் நீதி அமைச்சர், சட்டமா அதிபர், பிரதமர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெளிவிவகார அமைச்சர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நல்லிணக்கம் தொடர்பிலான தீர்மானங்களினை நடைமுறைப் படுத்துவது தொடர்

11

பெரும் போகமாக

## நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு

### ரூ.20 ஆயிரம் கொடுப்பனவு

07ஆம் பக்கம் பார்க்க

பண்டிகைகளை முன்னிட்டு

## ஐந்து நாட்களுக்கு மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை காலங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன்படி டிசம்பர் 24, 25, 26, 31 மற்றும்

11

கிறிஸ்துமஸ் தினம்

## அனைத்து மதுசாலைகளும் பூட்டு

(கொழும்பு)

எதிர்வரும் 25ஆம் திகதி மதுபானசாலைகள் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விட

11

## சரணடைந்த எழிலன் எங்கே? இராணுவம் பதில் கூறவேண்டும்

### இரா.சம்பந்தன் வலியுறுத்து



(கொழும்பு)

இராணுவத்திடம் எழிலன் (சசிதரன்) சரணடைந்திருந்தால் அல்லது எழிலனை அவரது குடும்பத்தினர் இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தால் அல்லது அவரை இராணுவத்தினர் கைது செய்திருந்தால் அவருக்கு என்ன நடந்தது என்பதை இராணுவத்தினர் தெரிவிக்க வேண்டும். அது அவர்களின்

11

## வடமராட்சி ஆழியவளை கடற்கரையில்

### சடலம் மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி ஆழியவளை கடற்கரையில் அடையாளம் தெரியாத சடலம் ஒன்று நேற்று புதன்கிழமை கரையொதுங்கியுள்ளது.

11

## நீதிமன்றம் மூலமே நீதி நிலைநாட்டப்படும்

### ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

21ஆம் நூற்றாண்டில் நீதி நிலைநாட்டப்படுவதை விரைவுபடுத்துவதில் மேல் நீதிமன்றத்துக்கு முக்கிய பங்கு உள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மொனார்க் இம்

11

## உள்ளூராட்சி தேர்தல் விவகாரத்தில் அரசியல் தலையீடுகள் இல்லை

### நீதி அமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் விவகாரத்தில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இல்லை என நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான முழுமையான அதிகாரம் தேர்தல்

11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுங்கத்திணைக்களத்தால் கைப்பற்றப்படும் வாகனங்கள்

## பொலிஸ் திணைக்களத்திற்கு

(கொழும்பு)

சுங்கத்திணைக்களத்தால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் போதைப் பொருள் தடுப்பு உள்ளிட்ட பொலிஸ் திணைக்களத்தின் சோதனைகளுக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைக்கான அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அதன்படி நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில் சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை பரிசோதிக்கும் நடவடிக்கையிலும் அமைச்சர் கலந்துகொண்டார்.

அந்த வாகனங்கள் மீதான சட்டத் தடைகளை நீக்கி பொலிஸ் துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (ம-7)


# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 14 . 02 . 1952

உதிர்வு 18 . 12 . 2022

அமரர்

**பொன்னையா பாலேந்திரன்**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்பாளினையும் திக்கரை முருகனையும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்

ந. ராமகிருஸ்ணா குடும்பத்தினர்(லண்டன்)

(13848)






உ
சிவமயம்

இணுவையூர்

**முருகஜீவ அறக்கட்டளை**

**INUVAIYUR MURUGAJEEVA FOUNDATION**

இணுவில் மேற்கு, இணுவில். ஸ்தாபிதம் : 18.01.2018 Inuvil West, inuvil.



அகவை அறுபதில் சேவை நிறைவு காணும்
எமது கல்லூரியின் வணிகபாட ஆசிரியை

**திருமதி ரஞ்சினிதேவி சிவசபேசன்**

(SLTS 1., Trd. Com., B.Ed.)

அவர்களை வாழ்த்துகிறோம்.

### சேவை விபரம்

| | | | |
|---|---|---|---|
| கிளி/பிரபந்தனாறு மகா வித்தியாலயம் | 1998.03.25 | - | 1998.05.31 |
| கிளி/தர்மபுரம் இல 1 அ.த.க. பாடசாலை | 1998.06.01 | - | 1999.12.31 |
| கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி | 2000.01.01 | - | 2000.08.29 |
| மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலை | 2000.08.30 | - | 2002.05.21 |
| கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி | 2002.05.22 | - | 2010.12.31 |
| யா/விக்னேஸ்வரக் கல்லூரி | 2011.01.01 | - | 2022.12.31 |



அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றிய எமது கல்லூரியின் ஆசிரியை பணிநிலை ஒய்வுக்காலத்தில் சகல செல்வங்களுடனும் நீண்ட ஆயுளுடனும் என்றென்றும் மகிழ்வுற்றிருக்க உளமார வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச்சமூகம்,
யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.
(13853)



அகவை அறுபதில் சேவை நிறைவு காணும் எமது
கல்லூரியின் நூலக உதவியாளர்

**திரு. கதிர்காமர் யோகேந்திரன்** (தரம் II)

அவர்களை வாழ்த்துகிறோம்.

### சேவை விபரம்



யா/அச்சுவேலி மகா வித்தியாலயம்
1998.08.10 – 1998.08.31
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி
1998.09.01 – 2018.04.22
யா/விக்னேஸ்வரக் கல்லூரி
2018.04.23 – 2022.12.31




அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றிய எமது கல்லூரியின் நூலக உதவியாளர் பணிநிலை ஒய்வுக்காலத்தில் சகல செல்வங்களுடனும் நீண்ட ஆயுளுடனும் என்றென்றும் மகிழ்வுற்றிருக்க உளமார வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச்சமூகம்,
யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.
(13852)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு சாத்தியமற்றது



## சரத் வீரசேகர

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் உண்மையான நோக்கம் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு கிடையாது என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தை புறக்கணித்தமை தொடர்பில் ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகாரப் பகிர்வு என்பது சாத்தியமற்றது. அதனால் ஜனாதிபதி தலைமையில் கடந்த 13 ஆம் திகதி இடம் பெற்ற கூட்டத்தில் கலந்துக் கொள்ளவில்லை.

நாட்டை பிளவுபடுத்தும் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு சாத்தியமற்றது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாட்டின் ஒருமைப்பாட்டை விட்டுக் கொடுக்க முடியாது

நாட்டை பிளவுபடுத்த பெரும்பான்மையான மக்கள் இணக்கம் தெரிவிக்கமாட்டார்கள்.

சமஷ்டி அடிப்படையில் நாட்டை பிளவுபடுத்துவது தமிழ் மக்களின் நோக்கமல்ல எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (நி)

## மத்தியஸ்தராக செயற்படப்போவதில்லை நிராகரித்தார் சொல்ஹெய்ம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கு அரசாங்கத்திற்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையில் மத்தியஸ்தராக செயற்படப் போவதில்லை என நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இந்த வாரம் எரிக் சொல்ஹெய்ம் தமிழ் அரசியல் கட்சிகளுடனும் எதிர்கட்சி தலைவருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தார்.

இந்த பேச்சுவார்த்தை குறித்து கருத்து தெரிவித்துள்ள எரிக் சொல்ஹெய்ம் இந்த பேச்சுவார்த்தைகள் சூழல் சார்ந்த விடயங்கள் பற்றியே அமைந்திருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் மத்தியஸ்தராக செயற்பட வேண்டும் எனவும் அரசியல் தீர்வை காண்பதற்கு உதவ வேண்டும் எனவும் வேண்டுகோள்கள் வெளியாகியுள்ளன.

எனினும் ஜனாதிபதியின் காலநிலை விவகாரங்களிற்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள சொல்ஹெய்ம் காலநிலை மற்றும் சூழல் விவகாரங்கள் தவிர தனக்கு வேறு ஆணையில்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆரம்பித்துள்ள அனைத்துக் கட்சி பேச்சுவார்த்தைகளில் வெளிநாட்டவருக்கு இடமில்லை என கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

## யாசகத்தில் ஈடுபடும் சிறுவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரிப்பு

(கொழும்பு)

சிறுவர்களை பயன்படுத்தி யாசகத்தில் ஈடுபடும் செயற்பாடுகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி. உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனைக்காக, சிலர் சிறுவர்களை பயன்படுத்தி யாசகத்தில் ஈடுபடுவதாகவும் இது குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## இலங்கை- இந்தியா கப்பல் சேவைக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி

(கொழும்பு)

இலங்கை - இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவையை முன்னெடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர். கேர்ணல் எம்.பி.பி.நளின் ஹேரத் தெரிவித்தார். இதனிடையே, இலங்கை மற்றும் இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பயணிகள் கப்பல் சேவை காங்கேசன்துறை மற்றும் பாண்டிச்சேரி இடையே முன்னெடுக்கப்படவுள்ளது.

இப் படகு சேவைக்கு இந்திய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து திருகோணமலை மற்றும் கொழும்புக்கு சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, காங்கேசன் துறையிலிருந்து இந்தியாவின் புதுச்சேரிக்கு பயணம் செய்ய சுமார் மூன்றரை மணி நேரம் ஆகும். ஒரு பயணத்தின் போது 300 முதல் 400 பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும்.

பயணி ஒருவரிடமிருந்து 60 அமெரிக்க டொலருக்கு இணையான கட்டணம் வசூலிக்குமாறு முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் ஒரு பயணி 100 கிலோ வரையிலான பொருட்களை எடுத்துச் செல்ல முடியும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (நி)


சிவ சிவ

தென்னாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்தத்துறையும்
தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும்
இணைந்து நடாத்தும்

மார்கழிப் பெருவிழா - 2022

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமனிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

**மார்கழித் திங்கள் 10ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் வழி பாட்டுடனும் தேவாரத் திருமுறை, நால்வர் எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**
(காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை)

- திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- அருள் உரை - தவத்திரு. **மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள்** (தருமை ஆதீன திருச்சி மௌன மட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர மட தம்பிரான் சுவாமிகள்)
- தொடக்கவுரை - கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவ சித்தாந்தத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- வாழ்த்துரை - பேராசிரியர். **சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்-யாழ். பல்கலைக்கழகம்)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **"அண்ணலார் உளர் அஞ்சுவது என்னுக்கே"** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. **எம்.கே. பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு **அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.30 மணி வரை**

**மாலை அரங்கம் - திருவாதவூரடிகள் திருவம்பலம்**
**(1.30 மணி முதல் 5.30 மணி வரை)**

- அருள் உரை - தவத்திரு. **அகத்தியர் அடிகளார்** (தென் கயிலை ஆதீன குருமுதல்வர்)
- தொடக்க உரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)
- வாழ்த்துரை - சிவத்திரு. **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **"எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்"** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு.**எம்.கே.பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்கல்
- நன்றியுரை - சிவத்திரு. **வரைாஜ் சசிராஜ்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"
திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 221 2739 / 070 770 1111**

(C-5566)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023 இல் ஆரம்பப் பிரிவுக்கு தவணைப் பரீட்சை இல்லை

(கொழும்பு)

அடுத்த வருடம் மார்ச் முதல் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் 2023ஆம் கல்வியாண்டில் ஆரம்பப் பிரிவுக்கு தவணைப் பரீட்சை நடத்தப்படமாட்டாது என கல்வி அமைச்சர் சுசில்பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தவணைப் பரீட்சைகளுக்கு பதிலாக ஒவ்வொரு பாடத்திற்கும் நடத்தப்படும் கணிப்பீட்டு புள்ளிகளுக்கு அமைய புள்ளி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்காலத்தில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி பாடசாலைகளில் இருந்து வெளியேறும் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கோ அல்லது திறமையின் அடிப்படையில் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கோ உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ம-7)


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் சமூக மருத்துவ உத்தியோகத்தர் (நல்லூர்) மருத்துவர் **வி.விஜிதா** அவர்களின் அன்புத் தந்தை

அமரர் வைத்திய கலாநிதி

**இரத்தினசபாபதி பொன்னையா (JP)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில் 22.12.1947 விண்ணில் 19.12.2022

**அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை** (13856)

## சேவைநயப்பு வாழ்த்துக்கள்



திருமதி

**வினோதினி லோகநாதன் (SLTS - I)**

(ஆசிரியர் - யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்)

*ஆற்றலுயர் ஆசிரியப் பணிதனிலே இணைந்து*
*போற்றுமுயர் சேவை செய்த ஆசிரியையே*
*ஏற்றமுற மாணவரை கற்பித்தே என்றும்*
*எம்முயர் மாணவரை உயரவைத்தாய்*
*ஊற்றெனவே அறிவு பெருக்கெடுக்கும் உங்கள்*
*உயரிய நற் சேவையினை மறவோம்*
*சீர்பரவும் நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய*
*சிறந்தநல் லாசிரியை சிறப்புடன் வாழியவே!*

எமது பாடசாலையில் இணைந்து மாணவர்களின் உயர்வுக்காய் உழைத்து உன்னத நற்பணியாற்றி ஓய்வுபெறும் ஆசிரியை **வினோதினி லோகநாதன்** அவர்களின் ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துகின்றோம்

பாடசாலைச் சமூகம்

(13849) யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்

## கூறுவிலை கோரல்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியில் நடாத்தப்படும் பானை முறையிலான வடி கலன் பொறித்தொகுதியை திருத்தம் செய்வதற்கான கூறுவிலையினை இத் துறைசார்ந்த அனுபவம் உள்ள தொழில் நுட்பவியலாளர்களாலும் பதிவு செய்யப்பட்ட கம்பனியிடமிருந்தே கூறுவிலைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இத் தொழில்நுட்பவியலாளர் இதுவரை திருத்தம் / புதிதாக அமைத்த பொறித்தொகுதி பற்றிய அனுபவ விபரத்தையும் சமர்ப்பிக்க வேண்டும் / திருத்தம் செய்ய வேண்டிய பொறித்தொகுதியை அலுவலக வேலை நாட்களில் காலை 8.30 தொடர்ந்து மாலை 4.30 மணிவரை பார்வையிடலாம். இதற்கான எமது தொலைபேசி இலக்கம் 021 205 0854 ஆகும். கூவிலைகள் அனைத்தும் 05.01.2023 திகதிக்குள் கிடைக்கக்கூடியவாறு தலைவர் தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கொத்தனி வரணி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ ஒப்படைக்கலாம். என்பதனை அன்போடு அறியத் தருகின்றேன். விண்ணப்பங்கள் அனைத்தும் நிர்வாகசபையில் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொண்டவருக்கு மட்டும் அறிவித்தல் வழங்கப்படும்.

நன்றி

க.இராசதுரை
தலைவர்

## திருத்தம் செய்ய வேண்டிய விபரம்

1. பயன்பாட்டில் உள்ள அடுப்பின் கதவினை 24"x24" அளவிற்கு பெரிதாக்கி, பானையின் நான்கு கால்களின் உதவியுடன் நிலை நிறுத்துதல் நான்கு கால்களும் அடுப்பின் உட்புறத்தில் அமைவதனால் புதிய செங்கற்கள் கொண்டு அடுப்பினைகட்டுதல் வேண்டும்.

**அல்லது**

1. பயன்பாட்டில் உள்ள அடுப்பின் கதவினை 24"x24" அளவிற்கு பெரிதாக்கி பானையினை தண்டவாளம் /| beam இல் நிலை நிறுத்தி அடுப்பின் வெளிப்புறமாக சீமெந்து தூண் 04 அமைத்து தண்டவாளத்தை அதன் மேல் நிலை நிறுத்தி அடுப்பின் வெளிப்புறமாக சீமெந்து தூண் 04 அமைத்து தண்டவாளத்தை அதன் மேல் நிலை நிறுத்தல்.

அல்லது இதற்கு பொருத்தமான வேறு திட்டங்கள் தங்களிடம் இருப்பின்.

2. பானையினை சுத்தம் செய்யப்பயன்படும் வாயிலை புதிதாக அமைத்தல்.
3. கண்ணாடியிலான Sprit அளவு பார்க்கும் அமைப்பை புதியதாக செய்து அதனை அறைக்குள் மாற்றி அதற்கான Piping செய்வதற்கு.
4. இருப்பிலான பிறேம் புதியதாக வர்ணப்பூச்சு பூசுதலும் சேதமான இடங்களை புதிய இரும்பினைக் கொண்டு வலுவூட்டலும்.
5. புகைபோக்கியை 12 அடி உயரத்துக்கு உயர்த்துதல்.
6. மாற்றவேண்டிய வால்வுகள், ஏனைய திருத்தங்கள் இருப்பின் தெரியப்படுத்தி பெறுமதியை தனித்தனி குறிப்பிட வேண்டும்.

பொதுமுகாமையாளர் - தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச. (C-5974)

## இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி



யாழ் .இந்து ஆரம்ப பாடசாலையின் ஓய்வு நிலை ஆசிரியை

**அமரர் திருமதி காந்திமதி நாகராசா**

அவர்களின் (இலண்டன் இறுதிக் கிரியையை முன்னிட்டு)

அன்னாரின் தன்னிகரற்ற கல்விப் பணியை நினைவு கூர்ந்து எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது துயர் நிறைந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! (13854)

பிரிவுத்துயரில்

**உடன் பணியில் நின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் (JHP)**

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் **ப.ரவிசங்கர்** அவர்களின் அன்புத் தந்தை

**திரு. வைத்திலிங்கம் பரயோகலிங்கம்**

(நயினாதீவு)

அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம்.அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்

**வலம்புரிக் குடும்பம்**

(ஊ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்தில் அடுத்து அடுத்து சுப்பர் வெற்றியாளர்கள்

டிசம்பர் 05 இலட்சம் ரூ 53 மட்டக்களப்பிற்கு...

வெற்றி வாரம் – 3647
விற்பனை முகவர்
பீ.பிரதீபன் அவர்கள்

டிசம்பர் 06 இலட்சம் ரூ 20 கொழும்பிற்கு...

வெற்றி வாரம் – 3648
விற்பனை முகவர்
மாலக்க சந்திரசேகர் அவர்கள்

டிசம்பர் 09 இலட்சம் ரூ 22 கொழும்பிற்கு...

வெற்றி வாரம் – 3651
விற்பனை முகவர்
என்.எஸ்.டேன் அவர்கள்



வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் நிதி அமைச்சு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல.356, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி - 0114 824 824

www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு

# 10 மில்லியன் பெறுமதியான மருந்துப் பொருட்கள் கையளிப்பு



(அராலி)

கனேடியத் தமிழர்கள் 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகளை தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இந்நிகழ்வில் கனேடியர் தமிழர் பேரவையின் மனித நேயப் பணியாளர் சிவம் வேலுப்பிள்ளை, செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி இ.சுரேந்திரகுமரன், தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை மருத்துவர்கள், பணியாளர்கள், நலன்புரிச் சங்க உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(4-6-33-104)



செலான் வங்கி நெல்லியடிக் கிளை ஊடாக செலான் பகசர நூலக செயற்றிட்டத்தின் கீழ் நூலக புனரமைப்புக்காக மெதடிஸ் மிஷின் பாடசாலைக்கு ஒரு தொகை புத்தகங்கள் மாணவர்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டன. (படம்:-மகாலிங்கம்)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புதிய வலைப்பந்தாட்ட மைதான திறப்புவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. 2021 ஆம் ஆண்டு நாடு முழுவதும் அனைத்து கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய 100 பாடசாலை விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் இந்த மைதானம் அமைக்கப்பட்டது. (படங்கள்:-கஜிந்தன், கணேசலிங்கம்)

# பயணிகள் பேருந்து மீது கல் வீசி தாக்குதல்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்குப்பிட்டி பாலத்தை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு பேருந்து ஒன்றின் மீது கல் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஏ-32 பாதை வழியாகச் சென்ற இ.போ.ச பேருந்து மீதே இனந்தெரியாத நபர்களால் கல் வீசி தாக்குதல் நடத்தப்பட்டு ள்ளது.

இதன்போது பேருந்தின் முன் பக்க கண்ணாடி சேதம டைந்த போதிலும் பேருந்தில் பயணித்தவர்களுக்கு எந்தவித மான பாதிப்பும் ஏற்படவில்லை.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ள நிலையில் பொலி ஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர்.

(4-6-30)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலையின் 2022 ஆம் ஆண்டிற்கான ஒளிவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் சு.பிறேமன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சசிக்குமார் கலந்து கொள்ளவுள்ளார்.

(4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 320 | 250 | 350 |
| தக்காளி | 180 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 170 | 180 | 150 |
| கோவா | 140 | 180 | 180 | 200 |
| கரட் | 200 | 320 | 350 | 400 |
| பூசணி | 100 | 140 | 120 | 160 |
| புடோல் | 200 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 140 |
| சின்ன வெங்காயம் | 650 | 500 | 650 | 900 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 400 | 450 | 800 |
| வெண்டக்காய் | 150 | 140 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 500 | 300 | 360 | 400 |
| லீக்ஸ் | 450 | 380 | 430 | 450 |
| பீற்றூட் | 400 | 400 | -- | 450 |
| கறிமிளகாய் | 600 | 700 | -- | 800 |
| முருங்கைக்காய் | 800 | -- | -- | -- |
| போஞ்சி | 400 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 160 | 120 | 150 | 150 |
| தேசிக்காய் | 150 | 250 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | 480 |
| முள்ளங்கி | 200 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 50 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 140 | -- | 160 |


## மணிவிழாவும் சேவை நலன் பாராட்டும்

## திருமதி.யேட்றூட் ஜெசீலி அன்ரனி தேவராஜா

பிரதி அதிபர் ( SLTS-I) பயிற்றப்பட்ட ஆசிரியர் (றோமன் கத்தோலிக்கம்)



கிறிஸ்தவ பாடமதை இனிதாய்
இதமாய் கற்பித்து முப்பத்தைந்து
ஆண்டு சேவை நிறைவாம் இன்று
உளமார வாழ்த்துகின்றோம்.
வண்ணச் சிட்டாய் என்றும்
வாட்டமின்றி வாக்கினில் உறுதியும்
கருத்தினில் நல் ஆழமும் கொண்டு
தூய சேவை தந்த எங்கள்
யேட்றூட் ஜெயசீலியே நீடு வாழ்க
நிறைவாக நீங்காது என்றும் உம் நினைவு
வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டு

Best Wishes

சேவை விபரம்

சேவை ஆற்றிய பாடசாலைகள்:

(சி-5568)

1. யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை - 17.08.1988-02.03.1993
2. யா/பலாலி ஆசிரியர் கலாசாலை - 03.03.1993-31.12.1994
3. யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை - 01.01.1995-31.12.1999
4. யா/தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம் - 01.01.2000-11.05.2010
5. யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி - 12.05.2010-15.06.2010
6. யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் - 16.06.2010-30.12.2022

பாடசாலைச் சமூகம்,
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை.


# திருட்டு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மாதந்தோறும் நடைபெறும் கிளினிக்கில் மருந்து பெறுவதற்காக வரிசையில் நின்ற ஒருவரின் கைப்பையில் இருந்த 4 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளது.

எனவே மருத்துவமனைக்கு வருவோர் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

(4-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு-அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க இம்முறை பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் ஆகக்கூடியது 20,000 ரூபாய் வரை பண உதவியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கொடுப்பனவு மீள அறவிடப்பட மாட்டாது என்பதுடன் முற்றிலும் நன்கொடையாகும்.

இதற்கமைய ஒரு ஹெக்டேயர் அல்லது அதனிலும் குறைவான நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான நெல் விவசாயிகளுக்கு 10,000 ரூபாவும் ஒரு ஹெக்டேயரிலும் அதிக நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நெல் விவசாயிகளுக்கு 20,000 ரூபாவும் வழங்கப்படவிருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மாத்திரமே இப்பண உதவி வழங்கப்படவுள்ளதுடன்இவை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படும்.

இம்முறை 8 இலட்சம் ஹெக்டேயர் வயல் பரப்பில் பெரும்போகப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கு அவசியமான உரத்தை கொள்வனவு செய்வதற்காகவே விவசாயிகளுக்க இப்பண உதவி வழங்கப்படுகிறது.

இதற்காக 8 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதுடன், நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் 12 இலட்சம் குடும்பங்களுக்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்படுமென்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (நி)



## மணிவிழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும்



**திரு. ஐயாத்துரை தெய்வேந்திரன்**

ஆசிரியர்-SLTS-I

தொழில் தகைமை- விசேட பயிற்சி விவசாயம்

முதல் நியமனம்- 18.03.1998

### சேவை விபரம்

யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்
1998.03.18 - 11.03.1999

யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி
12.03.1999 - 13.01.2001

யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்
14.01.2001 - 08.07.2003

யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை
09.07.2003 - 26.04.2013

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
27.04.2013 - 31.12.2022

Best Wishes

ஒப்பற்ற ஒளிரிய கல்விதனை ஒழுகிய வழி உரைத்தே
தப்பற்ற தன்னளி மாணாக்கரை அவ்வழி அனைத்தே
மப்பற்ற ஒளி தந்தன்ன வித்தை கண்டு விதைத்தே
துப்பற்ற நல்துறவு உற்றோரை விடுவித்தீர் வாழ்க பல்லாண்டே!

(13829)

வாழ்த்துவோர்:-ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா/நாவற்குழி ம.வி.

## சேவை நலன் பாராட்டு விழா

எமது பாடசாலையின் உப அதிபராக செவ்வனே கல்விப் பணியாற்றி 22.12.2022 இன்றுடன் கல்விப் பணியினை நிறைவு செய்வதையிட்டு பாராட்டுகின்றோம்.

Best Wishes



**திருமதி. ஜெயலட்சுமி சிவனேசன்**

(B.A,P.G.D in Edu., Sc.Trd, S.L.T.S-I)

### சேவை விபரம்

| | |
|---|---|
| கொ/பம்பலப்பிட்டி றோ.க.தமிழ் கலவன் பாடசாலை | - 21.06.1985-25.06.1985 |
| கொ/பம்பலப்பிட்டி முஸ்லீம் மகளிர் கல்லூரி | - 26.06.1985-28.02.1988 |
| யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | - 01.03.1988-31.12.1989 |
| கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை | - 01.01.1990-31.01.1993 |
| யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை | - 01.02.1993-10.10.1993 |
| யா/சென் தோமஸ் பெண்கள் பாடசாலை | - 11.10.1993-03.09.2000 |
| யா/சிவப்பிரகாச மகா வித்தியாலயம் | - 04.09.2000-19.01.2014 |
| யா/கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை | - 20.01.2014-22.12.2022 |

ஜெயலட்சுமி அவர்களின் மேலான சேவைகளை நினைந்து
இந்நாளில் வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.
தொடர்ந்தும் இல்லற வாழ்வில் இனிதான நினைவுகளுடன்
வாழ்வு சிறக்க வாழ்த்துகின்றோம்.

[C-5570]

வாழ்த்துவோர்:- அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள்
யா/கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை.

எமது பாடசாலையிலிருந்து இளைப்பாறிச் செல்லும் ஆசிரியர்களுக்கான

## சேவைநலன் பாராட்டு



**திரு. நடராஜா விக்கினேஸ்வரமூர்த்தி**

B.Com, PGDE (SLTS-I)

கல்வி கற்ற நிறுவனங்கள்
இணுவில் இந்துக் கல்லூரி (சைவப் பிரகாச) -(1-5)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - (6-13)
வணிகப்பட்டதாரி, பட்டப்பின் கல்வி
டிப்ளோமா-யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

சேவைக்காலம் 30 வருடங்கள்

| | |
|---|---|
| யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை | (11.01.1993 -27.10.1995) |
| யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி | (27.10.1995- 20.01.2014) |
| யா/ மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை | (20.01.2014- 20.02.2014) |
| யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை | (20.02.2014- இன்று வரை) |

Best Wishes

**செல்வி. தாமோதரம்பிள்ளை சரோசினிதேவி** (SLTS-I)



கல்வி கற்ற நிறுவனங்கள்
யா/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை (1-5)
யா/ சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி (6-13)
யா/ வட்டு இந்துக் கல்லூரி - மனைப்பொருளியல் டிப்ளோமா

சேவைக்காலம் 32 வருடங்கள்

| | |
|---|---|
| யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம் | (10.10.1990-31.01.1997) |
| யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் | (01.02.1997-19.01.2006) |
| யா/ அராலி இந்துக் கல்லூரி | (20.01.2006-07.01.2007) |
| யா/ [illegible] சைவப்பிரகாச வித்தியாலயம் | (08.01.2007-19.01.2014) |
| யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை | (20.01.2014- இன்று வரை) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துவோர் - யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை, ஆசிரிய நலன்புரிச் சங்கமும் பாடசாலைச் சமூகமும். (13822)




ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பங்கள் மற்றும் மாணவர்களுக்கு NSB ஊர்காவற்றுறை கிளையில் வைத்து யாழ். மாவட்ட NSB ஓய்வூதியர் சங்கத்தினால் உலர் உணவு பொருட்களுடன் அப்பியாசக் கொப்பிகளும் நேற்று வழங்கப்பட்டன.



வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியின் 2022 ஆம் ஆண்டிற்கான நத்தார் இன்னிசை வழிபாடு கடந்த 19 ஆம் திகதி தென்னிந்திய திருச்சபையின் வட்டுக் கோட்டை பேராலயத்தில் இடம்பெற்றது.
(படம்- கஜிந்தன்)



யாழ்.மாநகர சபையின் பொது நூலகத்தில் மேலதிக மாக காணப்படும் புதிய புத்த கங்களை வடமாகாண ரீதி யில் நூலகங்களுக்கு வழ ங்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாநகர சபை பொது நூலகமண்டபத்தில் நடை பெற்றது.(படம்- சிவசாந்தன்)



கிளிநொச்சி அறிவியல் நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள் ளது.
(படம்- யதுபாஸ்கரன், தேவானந்தன்)



யாழ். சிறைச்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள மியான்மார் அகதிகளுக்கு சுமார் 19 இலட்சம் பெறு மதியான அவசர தேவைப் பொருட்களை "மெசிடோ" நிறுவனத்தின் இயக்குநர் யாட்ஸ்சன் பிகிறாடோ தலைமையில் நிறுவனப்பிரதிநிகள் நேற்று செவ்வாய்க் கிழமை யாழ். சிறைச்சாலையில் வைத்து வழங்கி னர். (படம்-கஜிந்தன்.ஜோசப் நயன்)



யாழ். சுழிபுரம் விக்டோ ரியாக் கல்லூரியின் மாணவர் பாராளு மன்றத்தின் கன்னி அமர்வு நேற்று கல்லூரியின் பொது மண்டபத்தில் நடை பெற்றது. (படம்- கஜிந்தன்)

# ஜப்பானில் கடும் பனிப்பொழிவு



(டோக்கியோ)
ஜப்பானின் வடக்கு மாகாணமான நீகாட்டா வில் கடும் பனிப்பொழி வால் போக்குவரத்து பாதிக் கப்பட்டுள்ளது.

பனிப்பொழிவின் கார ணமாக புகையிரத போக்குவரத்து இரத்து செய்யப்பட்ட நிலையில், மக்கள் மாற்று போக்கு வரத்துக்காக பேருந்து களை நாடியதால், நீகா ட்டா பேருந்து நிலையத் தில் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

வீதிகள் மற்றும் நடை பாதைகள் பனி படர்ந்து வழுக்கும் நிலையில் இருந்ததால், பயணிகள் சவாலான சூழலை எதிர் கொண்டனர்.

கடந்த சில நாட்களாக ஜப்பானின் சில பகுதிகளில் வரலாறு காணாத பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன. (நி)

# ஆப்கான் பல்கலைக்கழகங்களில் பெண்கள் படிக்க இடைக்கால தடை

(காபூல்)
ஆப் கானிஸ் தானில் உள்ள அனைத்து அரச மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களில் பெண்கள் படிக்க இடைக்கால தடை விதித்து தலிபான் அரசா ங்கம் உத்தரவிட்டுள்ளது.

தலிபான் அமைப்பு ஆப் கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றியது முதல் ஆப்கா னிஸ்தானில் பல்வேறு புதிய கட்டுப்பாடுகள், அடக்கு முறைகளை அவர்கள் அமுல்படுத்தி வருகின்ற னர்.

முக்கியமாக பெண்க ளுக்கு எதிராக பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட் டுள்ளன.

ஆண்கள் துணையின்றி பொது இடங்களுக்கு செல்ல தடை, விமானத்தில் பயணி க்க தடை, ஆடை கட்டுப்பாடு என பல்வேறு கட்டுப்பாடு கள், தடைகள் விதிக்கப்பட்டு ள்ளன.

அதனை தொடர்ந்து தற்போது பெண்கள் பல்க லைக்கழகங்களுக்கு சென்று படிக்கவும் இடைக்கால தடை விதித்து தலிபான் அரசாங்கம் உத்தரவிட்டு ள்ளது.

மறு அறிவிப்பு வரும் வரை பெண்கள் கல்லூரி களுக்கு நுழையக்கூடாது என ஆப்கானிஸ்தான் உயர் கல்வி அமைச்சு உத்தர விட்டுள்ளது. (நி)

# கொரோனாவில் இருந்து தப்ப
## எலுமிச்சம்பழம் வாங்கிக் குவிக்கும் சீனர்கள்

(பீஜிங்)
சீனாவில் கொவிட் தொற்று மீண்டும் தலைதூக்கியுள்ள நிலையில், சீன மக்கள் இந்த நோயை எதிர்த்துப் போராட உள்ளூர் முறைகளை நாடி யுள்ளதால் எலுமிச்சையின் தேவை வேகமாக அதிகரித் துள்ளதாக சீன ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பீஜிங் மற்றும் ஷாங்கா யில் வசிப்பவர்கள் தங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க விற்றமின் சி நிறைந்த உணவுகளை வாங்குவதால் எலுமிச் சைக்கு அதிக தேவை எழு ந்துள்ளதாக எலுமிச்சை விவசாயிகள் தெரிவித்த னர்.

தற்போதுள்ள எலுமிச்சை தேவைக்கு 14 மணிநேரம் உழைக்க வேண்டியுள்ள தாகவும் வாரத்திற்கு 5 முதல் 6 தொன் எலுமிச்சை பழங்களை விற்பனை செய்து வந்ததாகவும், தற்போது 30 தொன்கள் விற்பனை செய்வதாகவும் சீன ஊடகம் ஒன்றுக்கு விவசாயி ஒருவர் தெரி வித்துள்ளார். (நி)

# ரஷ்யா- உக்ரைன் எல்லையில் எரிவாயு குழாயில் தீ விபத்து

(மொஸ்கோ)
மேற்கு ரஷ்யாவில் இரு ந்து ஐரோப்பியாவிற்கு இய ற்கை எரிவாயு கொண்டு செல்லும் குழாயின் ஒரு பகுதி வெடித்து சிதறியதில், மூன்று பேர் உயிரிழந்து ள்ளனர்.

சுவஷியா பிராந்தியத்தில் உள்ள பைப்லைனில் பழுது பார்க்கும் பணி நடைபெற்ற போது தீ விபத்து ஏற்பட்ட தாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

இதனிடையே, எரிவாயு குழாயில் வெடிப்பு ஏற்பட்ட போதும் ஐரோப்பிய நாடு களுக்கான ஏற்றுமதியில் பாதிப்பு ஏதும் இல்லை என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சாலை காணி என மக்களின் காணி அபகரிப்பு

(கண்டவளை )

கிளிநொச்சி பரந்தன் பிரதேசத்திற்குட்பட்ட குமரபுரம் பகுதியில் இரசாயன தொழிற்சாலைக்கான காணி எல்லையிடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கபபட்டது.

குறித்த காணிகள் தாங்கள் நீண்ட காலமாக குடியிருந்து வருவதாகவும் தமது காணிகளையும் சேர்த்து இரசாயனத் தொழிற்சாலைக்கான காணியெனத் தெரிவித்து எல்லையிட்டதுடன் நீண்ட காலமாக பயன்படுத்தி வந்த வீதியை மூடியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-315-316)



# எல்லை தாண்டிய மீன்பிடி 11 மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பதினொரு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை அருகே நேற்றைய தினம் புதன் கிழமை இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த பதினொரு மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி அழைத்து வந்து, மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-6-33)

# நெடுந்தீவிற்கு படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்



(அராலி)

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையின் பின்னர் நெடுந்தீவில் உள்ள சுற்றுலா மையங்களுக்கு, நாட்டில் பல்வேறுபட்ட இடங்களில் இருந்தும் தென் பகுதியிலிருந்தும் அதிகளவு மக்கள் வருகை தந்து நெடுந்தீவில் உள்ள சுற்றுலா மையங்களை பார்வையிடுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலா மையங்கள் அதிகமாக உள்ள நெடுந்தீவு பகுதியில் 550 வருடம் பழைமை வாய்ந்த மரம், வெளிச்சவீடு, ஒல்லாந்தர் காலத்து கோட்டை, போர்த்துக்கேயர் காலத்து மருத்துவமனை மேலும் பல தொல்பொருள் சான்றுகள் மற்றும் வரலாற்று சின்னங்கள் காணப்படுகின்ற நிலையில் நாட்டின் பல்வேறுபட்ட இடங்களில் இருந்தும் நெடுந்தீவிற்கு வருகை தருகிறார்கள். (4-6-104)

# பொருளாதார நெருக்கடியினால் 561 கர்ப்பிணிகள் பாதிப்பு

## வவு.மேலதிக அரசாங்க அதிபர்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக 561 கர்ப்பிணித் தாய்மார்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வவுனியா மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டோர் தொடர்பான விபரங்களை கோரிய போதே அவர் அதில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்படி, வவுனியா மாவட்டத்தின் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 348 கர்ப்பிணித் தாய்மாரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 213 கர்ப்பிணித் தாய்மாருமாக 561 பேர் பாதிப்படைந்துள்ளதாக அவர் அதில் தெரிவித்துள்ளார். (4-6-250)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரம் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் செயலமர்வு இன்று வியாழக்கிழமை யா/ இராமநாதன் கல்லூரியில் காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது என வலிகாம வலயகல்வி பணிப்பாளர் திருமதி. ஜ. ராஜசீலன் அறிவித்துள்ளார். (4-6-105)

# வீதிக்கு வந்த யானைகள் பயணிகள் அச்சம்



(நெளுக்குளம்)

வவுனியா, புளியங்குளம், நெடுங்கேணி பகுதியில் யானைகள் பல கூட்டமாக வீதிக்கு வந்தமையால் பயணிகள் அசௌகரியங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் வீதிக்கு வந்த யானை சுமார் 20 நிமிடங்கள் அப்பகுதியில் நடமாடிவிட்டு பின்னர் காட்டுக்குள் சென்றது.

நான்கு யானைகள் குட்டிகளுடன் வீதிக்கு வந்தமையால் அச்சமடைந்த பயணிகள் தமது வாகனங்களை திருப்பி வந்த திசை நோக்கிச் சென்றனர்.

அண்மைக்காலமாக நெடுங்கேணி பகுதியில் அவ்வப் போது மாலை வேளைகளில் வீதிக்கு யானை வருவதால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# முல்லைத்தீவு மண்ணில் மாற்றுத்திறனாளிகளின் எழுச்சி





முல்லை மண்ணில் மாற்றுத்திறனாளிகளின் எழுச்சி மனித குலத்தினை விழிப்புணர்வு பெறச் செய்வதில் சர்வதேச தினங்கள் வகிக்கும் பங்கு மகத்தானது. மனிதர்கள் யாவரும் சமம் என்னும் நிலை இருக்கும் நாடுகள் தான் அபிவிருத்தியடையும்.

இலங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கு மதிப்பளிக்கும் , அவர்கள் தம் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் நிகழ்வுகள் கிராமம்,பிரதேசம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற அளவில் வருடா வருடம் நடைபெற்றுவருகின்றன.

இந்த நிகழ்வுகள் மூலமாக இவர்களது வாழ்க்கைத்தர உயர்வுகள் ஏற்பட வழிபிறக்கின்றது. இவர்களது உரிமைகளைச் சர்வதேச அளவில் வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபை டிசெம்பர் 3 ஆம் நாளைச் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமாகப் பிரகடனம் செய்துள்ளது.

முல்லைத்தீவு மண்ணில் கடந்த 16 ஆம் திகதி இத் தினம் மிகவும் எழுச்சியுடன் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. முதல் நிகழ்வாக முல்லைத்தீவு மாவட்ட பேருந்து நிலையத்திலிருந்து மாற்றுத்திறனாளிகளுடன்,ஏனைய நிறுவனங்களது பிரதிநிதிகள், பொது மக்கள் இணைந்து கவனயீர்ப்புப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

பேருந்து நிலையத்தில் தரித்து நின்ற அரச. தனியார் பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஆசனம் ஒதுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி இயலாமை உடைய நபர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் என்ற ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் தமது தேவைகள் எவை என்பது குறித்த கருத்துகளைப் பொதுச் சமூகத்திற்குத் தெரிவித்துச் சென்றார்கள்.

வீதிக்கு இறங்கி அவர்கள் விதைத்துச் சென்ற கருத்துகளும் தாங்கி நின்ற சுலோகங்களும் பார்வையாளர்களைப் பெரிதும் ஈர்த்தன. மாற்றுத்திறனாளிகளது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மாவட்ட அரசாங்க அதிபர்க.விமலநாதனிடம் ஒப்படைத்தார்கள்.

அவர்களது ஆற்றல்மிகு கலை நிகழ்வுகள் பல மேடையேற்றப்பட்டன. மாற்றுத்திறனாளிகள் தமது வாழ்வை உயர்த்துவதற்குத் தன்னம்பிக்கையுடன் உழைக்கின்றனர். வலுவாக உள்ளனர் என்பதை இந்த நாள் உலகுக்கு எடுத்துக் காட்டியது.

வேதநாயகம் தபேந்திரன்

# இரு ஆர்.பி.ஜி செல்கள் உழவனூர் பகுதியில் மீட்பு



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உழவனூர் பகுதியில் தனியார் காணி உரிமையாளர் ஒருவர் நேற்று முன்தினம் தனது காணியினை துப்புரவு செய்யும் போது கைவிடப்பட்ட நிலையில் இரண்டு ஆர்.பி.ஜி செல்கள் இருப்பதனை அவதானித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு சென்ற தருமபுர பொலிஸார் இரண்டு செல்களையும் பார்வையிட்டதுடன் கிளிநொச்சி நீதிமன்ற அனுமதியுடன் இரண்டு செல்களையும் செயலிழக்க நடவடிக்கை எடுத்தனர். (4-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை






டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**தாவரவியற் பெயர்- Dimozarpus longon**
**குடும்பம்-Sapindaceae**
**ஆங்கிலம்-Longan furit**

வடமாகாண காடுகளில் வளரக்கூடிய போசாக்கு நிறைந்த காயகற்ப மூலிகை சார்ந்த பழமாகும். ஆனாலும் தெற்காசிய நாட்டை பிறப்பிடமாகக் கொண்ட மரமாகும். சாப்பிடக் கூடிய பழங்களை உருவாக்கும் உலர் வலய மரமாகும். கிட்டத்தட்ட 6-7 மீற்றர் உயரம் வளரக்கூடியது. இலங்கை, இந்தியா, சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் வளரக் கூடியது. 20 வயதுடைய மரங்களில் தான் பழங்களை வர்த்தக ரீதியாகப் பறிக்கலாம்.

மரங்களின் கிளைகளை வெட்டி பழங்கள் சேகரிக்கப் படுகின்றன. இப்பழங்களை மூங்கில் கூடைகளில் சேகரித்து பயன்படுத்தலாம். வட மாகாணத்தில் நெடுங்கேணி, முல்லைத்தீவு காடுகளில் பருவ காலத்தின் போது பெருமளவு சேகரிக்கலாம். இதன் உடன் பழங்கள், உலர் பழங்கள், விதைகள் மருத்து வத்தில் பயன்படுத்தப் படுகின்றன.

பல்லாண்டு வாழும் மரங்களில் இதுவும் இடங்கும். ஆனாலும் எமது நாட்டில் மரத்துடன் வெட்டி இப்பழங்களை சேகரிப்பதனால் இம் மரங்கள் நிறைய ஆண்டுகள் பாரிய அளவில் பழங்களை கொடுக்க முடியாத நிலையை ஏற்படுத்துகிறோம்.

சீனா, தாய்லாந்து போன்ற நாடுகளில் இப் பல்வேறு விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக அவுஸ்திரேலிய நாட்டிலும் இப்பழங்கள் Longon fruit பயிர் செய்யப்பட்டு பல ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சில நாடுகளுக்கு சீனா, தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இதன் பழங்களை பாதுகாத்து பொருள் சேர்த்து Canned in syrup முறையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதன் பழங்களை விட இதன் பூக்களும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் பூக்களின் சாறிற்கு உடற் பருமனை குறைக்கும் ஆற்றல் உண்டு. இதன் சாறு எலிகளுக்கு கொடுத்து பார்த்த பரிசோதனையில் கொழுப்பு குறைத்தமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதனுடைய பழங்கள் மிகவும் சுவையுடையது. ஒருவித நறுமணமுண்டு. இதன் பழச்சதைக்கு (Pericarp) புற்று நோய் கலங்களுக்கு எதிராக செயற்படும் தன்மையுள்ளதாக ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

ஈரல், நுரையீரல், இரப்பை சம்பந்தமான புற்றுநோய்க் கலன்களுக்கு எதிராக செயற்படும் தன்மை கூடுதலாக உண்டு. மேலும் பக்றீரியா, வைரஸ் போன்றவற்றிற்கு எதிரான தன்மை இதன் பழங்களுக்கு உண்டு. (Antibacterila, Anti virul)

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியையும் உடல் பலத்தையும் அதிகரிக்கும் தன்மை இதன் பழங்களுக்கு உண்டு. இதனுடைய பழச்சதை (Flesh of fruit) நித்திரையின்மையை நீக்கக் கூடியது. ஞாபகசக்தியை அதிகரிக்கும்தன்மையும் உண்டு. நரம்புகளில் ஏற்படும் நமைச்சலை குறைத்து சாந்தப்படுத்தும். (Soothe Nerves) இதன் உலர்ந்த பழங்களை குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு தினமும் இரவில் கொடுத்து வர ஞாபகசக்தி அதிகரிக்கும்.

100 கிராம் முரலிப் பழங்களிலுள்ள சத்துக்கள்.

சக்தி-60கி. கலோரி
காபோவைதரேற்று-15.14 கிராம்
நார்ப்பொருள்-1.1 கிராம்
கொழுப்பு-0.1 கிராம்
புரதம்-1.31 கிராம்
லைசின் Lycine-0.054 கிராம்
தயமின் ($B_1$)-0.031 மி.கிராம்
ரைபோபிளேவின் ($B_2$)-0.14 மி.கிராம்
நியாசின் ($B_3$)-0.3 மி.கிராம்
உயிர்ச்சத்து 'C'-84 மி.கிராம்
கல்சியம்-1 மி.கிராம்
இரும்புச்சத்து- 0.13 மி.கிராம்
மக்னீசியம்- 10 மி.கிராம்
பொஸ்பரஸ்- 21 மி.கிராம்
பொட்டாசியம்-266 மி.கிராம்.

இதனுடைய பழங்களுக்கு இரத்த அனுசேபத்தை (Blood Metabolism) சீராக்கும் தன்மையுண்டு. இதன் பழங்களை சாப்பிட்டுவர முரசு பலம் பெறும். இதனால் பற்களுக்கும் உறுதி கிடைக்கும்.

மற்றும் தோலை மிருதுவாகவும் வெடிப்புகள் வராமலும் பாதுகாக்கும். தாதுச் சத்துக்கள் பழங்களில் காணப்படுவதால் (Minerals) நரம்புகளின் தாபிதத்தைக் குறைத்து நரம்பு மண்டலத்தை பலப்படுத்தி மன உளைச்சலையும் தடுக்கக் கூடியதாக இருக்கும். இதில் உயிர்ச் சத்து C குறிப்பிடத்தகளவு இருப்பதனால் தடிமன், குளிர் போன்றவற்றை தடுத்து நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும். அத்துடன் இதன் பழங்கள் இருதயத்திற்கு பலத்தைக் கொடுக்கக் கூடியது.

எனவே மருத்துவ பண்புகள் நிறைந்த மிகுந்த சுவை கொண்ட பழங்கள் விளையும் எமது வடமாகாண காடுகளில் இம்மரங்களிற்கு தகுந்த பாதுகாப்பு கொடுப்பதுடன் சரியான முறையில் பயிர்ச் செய்கை, அறுவடை பழங்களை சேகரிக்கும் முறைகள் பற்றிய தொழில் நுட்பங்களை மக்களுக்கு கொடுத்து மரக் கொம்புகளுடன் வெட்டி பழங்களைச் சேகரிப்பதைத் தடுத்து முரலி மரங்களை வட மாகாணக் காடுகளில் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதாவது தாய்த் தாவரங்களை அழிக்காமல் பழங்களை சேகரிக்கும் முறைகள் பற்றி விழிப்புணர்வூட்டல் அவசியம் ஆகும்.

# கணிம மயமாகும் (டிஜிற்றல்) விவசாயம்!

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நாம் வாழும் தேசம் அழகான பூமி. பல்வகை வளங்களையும் பன்முகத் தன்மையையும் தன்னகத்தே வைத்து பண்பாட்டை அடையாளமாகக் கொண்டு தூய்மையாக அறுத்துறுத்து உச்சரிக்கப்படும் பல்வகை மொழிகளின் இருப்பிடமாக உளரீதியான நெருக்கீடுகளிருந்தும் அவற்றையும் தாண்டி தத்தமது வாழக்கையை செப்பனிட்டு வாழ்வாதாரத்தை முன்னகர்த்தி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஒவ்வொருவருக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் அனைத்தையும் முகங்கொடுத்து சமாளித்து தத்தமது குடும்ப நல்லுறவை மேம்படுத்த முயற்சிக்கும் அதே வேளையில் எம்மையும் தாண்டிய பிரச்சினைகள் தினந்தினம் அனைவரையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

உலக தொற்றுநோய்களின் பரவல் அதன் காரணமாக நாம் அனைவரும் திக்குமுக்காடி வரும் தருணங்கள். பொருளாதார வீழ்ச்சியின் பாதிப்பு எமது வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பிரதிபலிக்கும் நிலைமை. பொருட்களின் அதீத விலையேற்றம். இவை அனைத்தையும் தாண்டி மாறிவரும் காலநிலை என்பன சமகாலத்தில் வாழும் அனைவருக்குமான பாரிய சவால்கள்.

காலமாற்றத்தின் காரணமாக சமகால கண்டுபிடிப்புக்கள் இன்னும் இன்னும் தொழில்நுட்ப வளர்ச்சியை இறுகப்பற்றி மேலெழும்பும் நேரத்தில் நாமும் இதற்குள் இறுகப் பற்றிக்கொள்ளாவிட்டால் எம்மை நாமே தனிமைப் படுத்திக் கொண்டதாகிவிடும். கொவிட் தொற்று நோய் தீவிரமடைந்த காலகட்டத்தில் அனைவருக்கும் இணைப்புப் பாலமாகவும் அவசியமான தொடர்பாடல் சக்தியாகவும் எளிமையான அனைவராலும் பயன்படுத்தக் கூடியதான தொழில்நுட்பமே விளங்கியதென்பதனை அனைவரும் புரிந்து கொண்டால் இந்த டிஜிற்றல் உலகிற்குள் நாம் எம்மை விரும்பியோ விரும்பாமலோ உள்ளீர்த்துக் கொள்வதே எமக்கான ஒரேயொரு மாற்று வழியாகும். குறிப்பாக கைப்பேசி தொழில்நுட்பம் மூலமான தொடர்பாடல் அதிகளவில் அனைவராலும் பயன்படுத்தப்பட்ட காலப் பகுதியாக கொவிட் தனிமைப்படுத்தல் அமைந்ததை நாம் அறிவோம். அதனது தொடர்ச்சி இன்றும் இன்னும் வியாபித்து செல்வதனையும் நாம் நேரடியாக காணலாம். டிஜிற்றல் வழி தொடர்பாடல்கள் இன்னும் கருவிகளின் பயன்பாடும் பல வகையினதாக அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக வரத் தொடங்கிவிட்டது. அவற்றின் தன்மையையும் பயன்பாட்டையும் நாம் முழுவதுமாக புரிந்து கொண்டால் விவசாயத்திலும் அதனை இலகுவாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கணிம (டிஜிற்றல்) விவசாயம்**

பொருளாதாரம் வீழ்ந்து கிடக்கின்ற இந்நேரத்தில் அதனை தூக்கி நிறுத்தும் செயற்பாடுகளுக்கு முத்தாய்ப்பாய் அதனை மையப்படுத்திய திட்ட முன்னகர்வுகள் முன்மொழியப்பட்டுள்ள நிலையில் இன்னும் 25 ஆண்டுகள் முழுவதுமாக இந்த பொருளாதார வீழ்ச்சியை சீர்செய்து வழமையான நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்பதனை அறிவித்திருக்கின்றார்கள். இந்த நிலையில் விவசாயத்தை பழைய நிலையில் வைத்து தொடர்ந்து பயணிப்பதென்பது இயலாத காரியமாகவே பார்க்கப் படுகின்றது. மாறாக விவசாயத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்து பாரம்பரிய முறைகளை முழுவதுமாகவே எடுத்தெறியாது அதனை யொற்றி செயன்முறைகளை கணிமமயமாக்கி சூழலுக்கு பாதகமற்ற ஆனால் வினைத்திறனான விவசாயத்தை செய்வதற்கான மாற்று பரிந்துரையாக முன்மொழியப்பட்ட செயல் வடிவம் தான் கணிம விவசாயம் (டிஜிற்றல் - Digital).

கணிம விவசாயம் என்பதனை கணனிமய விவசாயம் எனவும் நீட்டிப்பார்க்கலாம். இரு பதங்களும் ஓர் அர்த்தத்துடன் இருப்பதை காணலாம். கணிம விவசாயம் சமகாலத்திற்கு தேவையானதாக மாற்றம் பெற்றிருக்கின்றது. நாம் விரும்பியோ விரும்பாமலோ அவசியமான மாற்றங்கள் பலவற்றை எமது நடைமுறைக்குள் ஏற்படுத்தியே ஆகவேண்டும் என்றிருக்கின்ற நிலையில் கணிம விவசாயத்தின் பயன்களை முழுவதுமாக தெரிந்து கொண்டால் சூழலுக்கிணைவான ஆக்கபூர்வமான விடயத்தை நாம் முன்னிறுத்தி மேற்கொண்டு செல்ல முடியும். அந்த வகையில் கணிம விவசாயத்தின் நன்மைகள் பலவற்றை இக்கட்டுரை விளக்கி செல்கின்றது. வாருங்கள் தொடர்ந்து வாசியுங்கள். நீங்கள் அறிந்ததை மற்றையவர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள். அறிவைப் பெறுவதைப் போல அறிவை பகிர்ந்து கொள்வதும் மேன் மக்களின் கண்ணியமான செயலன்றோ? இது நாம் வாழும் சமூகத்தின் பால் நாம் கொண்டிருக்கும் எமது கவனிப்பு என்றால் மிகையாகாது.

கணிம விவசாயத்தின் பிரதிபலன்கள் பலவிருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். எமது பாரம்பரியமுறைகளை அடியொற்றியதான முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவே அனைவரும் விருப்பபடுகின்றோமல்லவா. நிச்சயமாக அதற்கு எந்தகுறையும் இன்றி இந்த விருத்தியடைந்த தொழில் நுட்பத்தை எமது விவசாயச் செயன் முறைகளில் நாம் பயன்படுத்த முன்வர வேண்டும். ஏலவே பலவகையான தொழில்நுட்பங்கள் எமது வாழ்வியலில் இன்றியமையாதவையாக உருவெடுத்துள்ளன.

மொபைல் அல்லது கைப்பேசி தொழில்நுட்பம் அனைத்து மக்களையும் இணைக்கும் முக்கியமான உறவுப் பாலமாகவும் இன்னும் ஒருபடி மேலே போய் உணர்வுப் பகிர்வு பாலமாகவும் மாற்றமடைந்திருக்கின்றது. எமது தொடர்பாடலில் 60 சதவீதத்தை முழுமையாகவே உள்ளடக்கியதாக கைப்பேசி தொழில்நுட்பம் விசாலமாக வளர்ந்திருக்கின்றது. இது ஒருவகை கணிம-விவசாயத்தின் பிரதிபலிப்பேயன்றி வேறில்லை. இலத்தினியல் விவசாயத்தின் பிரதிபலிப்பு கிடைக்கின்ற அனைத்து வளங்களையும் குறிப்பாக மனித மற்றும் புவியியல் வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதாகும்.

கணிம விவசாயத்தின் பயன்பாடுகள் செயற்கை நுண்ணறிவு. எந்திரன் பயன்பாடு. மனிதரற்ற பறக்கும் கருவிகள், விமானங்கள் இதில் ட்ரோன்களும் உள்ளடக்கம். செயற்கை உணரிகள் மற்றும் தொடர்பாடல் தகவல் தொழில்நுட்பம் என்பனவும் அடங்குகின்றன.

காலநிலை மாற்றம் தற்போது நாம் எதிர்பார்க்காதவாறு மாறத் தொடங்கியிருக்கின்றது. இதற்கான அணுகுமுறைகளை கிடைக்கக்கூடிய வசதிவாய்ப்புக்களைப் பயன்படுத்தி தினந்தினம் எதிர்வுகூறும் செயற்பாட்டை விரைந்து செய்வதன் மூலம் தகவல் தொழில்நுட்பத்தின் அனைத்து வகைகளையும் பிரயோகித்து விவசாய பெருமக்களையும் பண்ணையாளர்களையும் பாரிய இடர்களிலிருந்து காப்பாற்றும் அதேநேரத்தில் உற்பத்தியினையும் பெருக்கிக் கொள்ள வாய்ப்புக்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம் 112

## தோல்வியும் அவமானங்களுமே வெற்றிக்கான உந்துசக்தி



ஓர் ஊரில் பெரிய தொழிலதிபர் ஒருவர் இருந்தார். அவர் அந்தத் தொழிலில் நிறைய சாதனைகள் செய்திருந்தமையால் அந்த ஊரிலுள்ள அமைப் பொன்று அவருக்கு பரிசு கொடுக்கலாமென முடிவு செய்தது. அதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டு அவருக்கு பரிசு கொடுக்கப்பட்டது.

அதன்பிறகு சிறிது நேரம் உரையாற்றிய அவர், அரங்கத்தில் இருந்தவர்களைப் பார்த்து, "உங்களுக்கு என்னிடம் ஏதேனும் கேள்வி இருந்தால் கேட்கலாம்" என்றார்.

ஒருவர் எழுந்து, "உங்கள் வெற்றிக்கு பின்னால் யார் இருந்தது?" எனக் கேட்டார். "உங்களைப் போல் சாதாரணமாக கோட் சூட் போட்டிருக்கிறவர்களுக் கெல்லாம் என்னால பதில் சொல்ல முடியாது" என்றார் அந்த தொழிலதிபர்.

இதை கேட்ட அந்த நபர், கண்கள் கலங்கியபடி தனது இருக்கையில் அமர்ந்து கொண்டார். மீண்டும், "யாருக்கேனும் கேள்விகள் இருந்தால் கேட்கலாம்" என்றார் தொழிலதிபர்.

யாரும் கேள்வி கேட்க தயாராக இல்லாத பட்சத்தில் ஒரே ஒரு கை மட்டும் உயர்ந்தது. அந்த நபர், "உங்கள் வெற்றிக்கு பின்னால் இருக்கும் காரணம் என்ன?" என்றார்.

தொழிலதிபர் அந்த நபரைப் பார்க்கையில், அவர் மிகச் சாதாரணமான சட்டையும் சாதாரண நீளக் காற்சட்டையும் தான் அணிந்திருந்தார். ஆனாலும் அந்த நபரை மேடைக்கு அழைத்து அவரை கட்டிப்பிடித்து, "நீ நிச்சயமாக ஒரு நாள் பெரிய ஆளாக வருவாய்" என்றார்.

எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். ஒரே கேள்வியைத் தானே இருவரும் கேட்டார்கள். ஒருவரை அவமானப்படுத்தி விட்டு இன்னொருவரை பாராட்டுகிறாரே என்று யோசிக்கையில், அந்த தொழிலதிபர் பேச ஆரம்பித்தார்.


"இன்று நானொரு தொழிலதிபராக இருக்கிறேன். எல்லோரும் என்னைப் பார்த்து பாராட்டும் நிலையில் இருக்கிறேன். ஆனால், இந்த இடத்துக்கு நான் சுலபமாக வந்துவிடவில்லை. ஒரு காலத்தில் நான் ஒரு கடையில் மூட்டை தூக்கும் பையனாக இருந்தேன். அப்போது என்னுடைய தோற்றத்தையும் உடையையும் பார்த்து நிறைய பேர் கிண்டல் செய்திருக்கிறார்கள். அதன்பின்னர் கொஞ்சமாக பணம் சேர்த்து மலிகைக் கடையொன்றை நடத்தினேன். அதில் எல்லா வேலைகளையும் நானே செய்தேன். அதன்பின்னர் கொஞ்சம் வளர்ந்து சுப்பர் மார்க்கெட் ஒன்றை ஆரம்பித்தேன். அதன் பின்னர் என்னை நிறைய கூட்டங்களுக்கு அழைத்தார்கள். அதன்பிறகு நிறைய கஷ்டங்கள் பட்டு ஒரு தொழிலதிபர் ஆனேன். தொழிலதிபர் ஆனதன் பின் இன்னும் நிறைய சங்க கூட்டங்கள் இப்படியெல்லாம் நடக்கும். அதற்கெல்லாம் நான் போகும் போது ஒரு அளவுக்கு என்னுடைய உடை நேர்த்தி யாக இருந்தாலும் என்னுடைய பேச்சை என்னால் மாற்ற முடியவில்லை. எனக்கு பெரிதாக ஆங்கிலம் தெரியாது. மற்றவர்களுடன் பேச எனக்கு வெட்கமாக இருந்தாலும் நான் தைரியமாக பேசுவேன். பல இடங்களில் என்னை ஏளனமாக பார்த்து, எனது நிறத்தை, உருவத்தை வைத்து எடை போட்டிருக்கிறார்கள். இவையெல்லாவற்றையும் மீறித்தான் நான் என்னுடைய உழைப்பில் உறுதியாக இருந்து ஒரு பெரிய நிலைமைக்கு வந்திருக்கிறேன். அதனால் எனது வெற்றிக்கு பின்னால் இருப்பது நான் பட்ட அவமானங்கள் மட்டுமே. நீங்களும் வெற்றி பெற வேண்டுமானால், எந்தளவுக்கு உழைப்பு இருக்கனுமோ எந்தளவுக்கு திறமையிருக்கனுமோ அதைவிட இரண்டு மடங்கு அவமானத்தை தாங்கும் மனப்பக்குவம் இருக்கணும். அந்த மனப்பக்குவம் இருந்தால் தான் வெற்றியடைய முடியும்" என்றார்.

ஒரு சிறிய சோதனைக்காகவே முதலில் எழுந்த நபரை அவமானப்படுத்தினார். அந்த நபர் அவமானப்பட்டதுமே வெட்கப்பட்டு அமர்ந்துவிட்டார். ஒருவர் அவமானப்படுவதை கண்முன்னே பார்த்த பிறகும் இன்னொருவர் எழுந்திருந்து கேள்வி கேட்டார் இல்லையா? அந்த துணிச்சல்தான் வெற்றி பெறவேண்டும் என நினைக்கும் ஒவ்வொருவருக்குமே தேவை.

நீங்களும் பல இடங்களில் அவமானப்பட்டிருக்கலாம். பல ஏளனமான பார்வைக்கும் பேச்சுக்கும் ஆளாகியிருக்கலாம். உங்களுடைய வசதியையோ தோற்றத்தையோ காரணம் காட்டி நிறைய பேரினால் ஒதுக்கப்பட்டிருக்கலாம் ஆனால், அத்தனை அவமானங்களுக்கும் பதில் உங்களது வெற்றி மட்டும்தான்.

# யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் சேவைநலன் பாராட்டு விழா 2022

மணிவிழா நாயகிகள்



## திருமதி. கோவிந்தராணி கருணானந்தன்

(பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் (பகுதித் தலைவர்))

(SLTS-I, B.A, PGDE)

"விசும்பின் துளி வீழில் அல்லால் மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பதரிது"

சேவை விபரம்

குளி/ கிரி/ பம்மன்ன அல்கமர் முஸ்லீம் ம.வி
1984.01.02-1987.02.08
யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை
1987.02.09 -1988.12.31
குளி/ கிரி/பம்மன்ன அல்கமர் முஸ்லீம் ம.வி
1989.01.01-1991.08.31
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
1991.09.01-1995.12.31
கிளி/பூநகரி ம.வி
1996.01.01-1998.08.23
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
1998.08.24- 2000.12.31
யா/அரியாலை கிழக்கு அரசினர்
தமிழ்க்கலவன் பாடசாலை
2001.01.01-2003.06.10
யா/நாவாந்துறை றோ.க வித்தியாலயம்
2003.06.11- 2014.01.07
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாலயம்
2014.01.08-2014.01.15
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
2014.01.16-2022.12.30



## ந. கௌரி ஆசிரியர்

(SLTS-I, B.A)

சேவை விபரம்

மன்/தூயயோசவாஸ் ம.வி
2002.07.18 -2005.09.08
மன்/ பறப்பாங்கண்டல் றோ.க.த.க
2005.09.09-2010.12.31
யா/ பெரியபுலம் ம.வி
2011.01.01-2022.12.30

Best Wishes

## திருமதி. கமலவேணி ஜெகதீஸ்வரன்



(SLTS-I, பயிற்றப்பட்ட மனைப்பொருளியல் ஆசிரியர்)

சேவை விபரம்

மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா
1993.06.15-1999.03.24
யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
1999.03.25-2000.12.31
மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா
2001.01.01-2001.09.09
யா/உயரப்புலம் மகா வித்தியாலயம்
2001.09.10-2015.03.22
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
2015.03.23-2022.12.30

நல்லறிவும் அழகுக்குணமும்
நற்பண்பும் நிறைவு பெற்று
மனங்கவரும் விதங்களில்
மலர்ந்திடும் மலர்களைப்போல்
ஆற்றல் மிகு கருத்துக்கள் முன்வைத்து
அறிவு சார் மாணாக்கரை உருவாக்கி
ஏற்றமிகு தேசத்தின் புகழ்ச்சி பெற
தேன்சிட்டாய் திகழ்ந்து
கடமையுணர்வுடன் காரியம் பெருகிட
ஆரவாரமின்றி அறுபது அதனை நிறைவு செய்திடும்
மணிவிழா நாயகிகள் ஓய்வுக் காலமதனில் ஓய்ந்திடாமல்
ஒளிவிளக்காய்த் திகழ்ந்தீடுவீர்
வாழிய வாழிய வாழியவே!

(13847)

வாழ்த்துவோர்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் , ஆசிரிய நலன்புரிக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 56





இறங்கினார்கள். இந்த வாதப் போர்களில் சில சமய அத்வைதிகளும் கலந்து கொண்டார்கள். சமய வாதப் போர்கள் சில சமயம் அடிதடி சண்டையாகப் பரிணமித்தன. அந்தக் காலத்து சைவ வைஷ்ணவப் போரை விளக்கும் அருமையான கதை ஒன்று உண்டு.

ஸ்ரீரங்கத்து வைஷ்ணவர் ஒருவர் திருவானைக்காவல் ஆலய வெளிச்சுவரின் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தார். தலையில் திடீரென்று ஒரு கல் விழுந்தது. காயமாகி இரத்தமும் கசிந்தது. வைஷ்ணவர் அண்ணாந்து பார்த்தார். கோபுரத்தில் ஒரு காக்கை உட்கார்ந்தபடியால் அந்தப் பழைய கோபுரத்தின் கல் இடிந்து விழுந்திருக்க வேண்டும் என்று அறிந்தார்.

உடனே அவருக்குக் காயமும் வலியும் மறந்து போய் ஒரே குதூகலம் உண்டாகி விட்டது. "ஸ்ரீரங்கத்து வீர வைஷ்ணவக் காக்காயே! திருவானைக்காவல் சிவன் கோயிலை நன்றாய் இடித்துத் தள்ளு!" என்றாராம்.

அந்த நாளில் இத்தகைய சைவ வைஷ்ணவ வேற்றுமை மனப்பான்மை மிகப் பரவியிருந்தது.

இவ்விதம் தமிழ் நாட்டில் நம் கதை நடந்த காலத்தில் அதாவது சுமார் 980 வருடங்களுக்கு (1950 இல் எழுதப்பட்டது) முன்பு, பெரியதொரு சமயக் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. இந்தக் கொந்தளிப்பிலிருந்து தீங்கு தரும் அம்சங்கள் சிலவும் தோன்றிப் பரவின.

வீர வைஷ்ணவர்களும் வீர சைவர்களும் ஆங்காங்கு முளைத்தார்கள். இவர்கள் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் சண்டையில்

இதைத் தெரிந்து கொள்ளுதல், பின்னால் இந்தக் கதையைத் தொடர்ந்து படிப்பதற்கு மிக்க அனுகூலமாயிருக்கும்.

ஓடம் அக்கரை சென்றதும், சைவப் பெரியார் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "நீ நாசமாய்ப் போவாய்!" என்று கடைசி சாபம் கொடுத்து விட்டுத் தம் வழியே போனார். வந்தியத்தேவனுடன் வந்த கடம்பூர் வீரன் பக்கத்திலுள்ள திருப்பனந்தாளுக்குச் சென்று குதிரை சம்பாதித்து வருவதாகச் சொல்லிப் போனான்.

ஆழ்வார்க்கடியானும் வந்தியத்தேவனும் ஆற்றங்கரையில் அரச மரத்தின் அடியில் உட்கார்ந்தார்கள். அந்த மரத்தின் விசாலமான அடர்ந்த கிளைகளில் நூற்றுக்கணக்கான பறவைகள் மதுரமான கலகலத்வனி செய்து கொண்டிருந்தன.

வந்தியத்தேவனும் நம்பியும் ஒருவருடைய வாயை ஒருவர் பிடுங்கி ஏதாவது விடயத்தைக் கிரஹிக்க விரும்பினார்கள். முதலில் சிறிது நேரம் சுற்றி வளைத்துப் பேசினார்கள். "ஏன் தம்பி! கடம்பூர் மாளிகைக்கு என்னை அழைத்துப் போகாமல் விட்டு விட்டுப் போனாயலலவா?"

"நான் போவதே பெரிய கஷ்டமாகப் போய்விட்டது நம்பிகளே!"

"அப்படியா? பின் எப்படித்தான் போனாய்? ஒரு வேளை போகவில்லையோ?"

"போனேன், போனேன், ஒரு காரியத்தை உத்தேசித்து விட்டால் பின்வாங்கி விடுவேனோ? வாசற்காவலர்கள் தடுத்தார்கள். குதிரையை ஒரு தட்டு தட்டி உள்ளே விட்டேன். தடுத்தவர்கள் அத்தனை பேரும் உருண்டு தரையில் விழுந்தார்கள். பிறகு அவர்கள் எழுந்து வந்து என்னைச் சூழ்ந்து கொள்வதற்குள் என் நண்பன் கந்தமாறன் ஓடி வந்து என்னை அழைத்துப் போனான்."

"அப்படித்தான் இருக்கும் என்று நான் நினைத்தேன். மிக்க தைரியசாலி நீ. சரி அப்புறம் என்ன நடந்தது? யார், யார் வந்திருந்தார்கள்?"

"எத்தனையோ பிரமுகர்கள் வந்திருந்தார்கள். அவர்களுடைய பெயரெல்லாம் எனக்குத் தெரியாது.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

# பரமார்த்த குரு கதைகள்

## தூங்கும் ஆறு



(நேற்றைய தொடர்ச்சி)

பயந்து பதறிப் போய் விட்டான் மிலேச்சன். உடலெல்லாம் நடுங்கியது அவனுக்கு. நல்ல வேளை உண்மையைக் கண்டுபிடித்து விட்டோம். இல்லையென்றால் குருநாதர் கதி என்னாவது? இந்தப் பொல்லாத ஆறு இன்னும் தூங்கவேயில்லை. விழித்துக் கொண்டேயிருக்கிறது. ஆறு விழித்திருக்கும்போது இறங்கினால் அது அப்படியே விழுங்கி விடாதா?

அடித்துப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தான் மிலேச்சன். அவன் இதயம் வேக வேகமாக அடித்துக் கொண்டது.

குருவே! குருவே! நல்ல வேளையாக நான் கண்டு படித்து விட்டோன். ஆறு விழித்துக் கொண்டு தான் இருக்கிறது. இப்போது நாம் இதில் இறங்கிக் கடக்க நினைத்தால் அது ஆபத்தில் தான் முடியும் என்றான் மிலேச்சன்.

"என்ன? நதி இன்னும் தூங்கவில்லையா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் பரமார்த்த குரு.

"இல்லை குருவே! அது நான் தொட்டவு[illegible] எப்படிச் சீறிப் பாய்ந்தது தெரியுமா? அந்த மட்டும் நான் புத்திசாலியாக இருக்கவே... ஆற்றுத் தண்ணீரில் இறங்காமல் கரைமேல் இருந்தபடியே அதைச் சோதித்துப் பார்த்ததால், உயிர் தப்பித்தேன்.

அப்பப்பா... இந்த ஆற்றுக்கு எவ்வளவு கோபம் வருகிறது தெரியுமா? பாம்பைப் போல சீறிப் பாய்ந்து என்னைக் கொல்லவே முயன்றது. என் முன்னோர் செய்த தவப்பயனாலும், குருநாதரின் அருளாசியாலும் என் உயிருக்கு எந்தக் கெடுதலும் நேரவில்லை" என்று மூச்சிரைக்கப் பேசினான் மிலேச்சன்.

அதைக் கேட்டதும் பரமார்த்த குரு அதிர்ச்சியுற்றுப் போய் விட்டார். அவருக்குப் போன உயிர் திரும்பி வந்ததைப் போல் மகிழ்ந்தார்.

"[illegible] அனுப்பினேனோ பிழைத்தேனோ! ஆற்றைச் சோதிக்க வேண்டும் என்ற விடயம் முன் கூட்டியே நம் அறிவுக்கு எட்டாமல் இருந்தால் இந்நேரம் என்ன ஆகி யிருக்கும்? ஆராயாமல் ஆற்றில் இறங்கியிருப்போம்.

எல்லாரும் அடியோடு போயிருப்போம். எல்லாம் கடவுள் செயல். அவர் நம்மைக் காப்பாற்றி விட்டார். அந்த முன்புத்தியை நமக்குக் கொடுத்த ஆண்டவனின் கருணாகடாட்சத்தை என்னென்று சொல்வது? அவனல்லாமல் இந்த உலகத்தில் எது நடக்கும்?" என்று ஆண்டவன் அருளைக் குரு பலவாறு கூறி வியந்து பயபக்தியோடு கன்னங்களில் போட்டுக் கொண்டார். அவ்வாறே சிஷ்யர்களும் 'பளார் பளார்' என்று தங்கள் கன்னங்களில் மாறி மாறிப் புத்தி போட்டுக் கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்தார்கள்.

கடவுளே! உன் கருணையே கருணை எங்களைக் காப்பாற்றி விட்டாய், எங்கள் குரு பக்தியும் வீண் போகவில்லை!" என்று சொல்லி சொல்லி மகிழ்ந்து போனார்கள்.

மீண்டும் அவர்கள் தீவிர யோசனையில் ஆழ்ந்தார்கள். எப்போது அந்த ஆற்றைக் கடப்பது... ஆறு எப்போது தூங்கும்? (தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓ.எம்.பி அலுவலகத்தை அகற்றுங்கள் இல்லாவிட்டால் நாம் அகற்றுவோம்

## மன்னாரில் உறவுகள் எச்சரிக்கை

(மன்னார்)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்து இனி நீதி அமைச்சர் எங்கும் கதைக்க கூடாது. கண்துடைப்புக்காக மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள ஓ.எம்.பி அலுவலகத்தை உடனடியாக மன்னாரில் இருந்து அகற்ற வேண்டும். அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்படும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு இழப்பீடு வழங்குவதாக இவ்வளவு காலமும் நீதி அமைச்சர் கூறி வருகிறார். எங்களுக்கு இந்த இழப்பீடு வேண்டாம் என்று நாங்கள் கூறி வந்தோம். காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளும், பிள்ளைகளுமே எமக்கு வேண்டும் என பல வருடங்களாக போராடி வருகின்றோம். அரசாங்கத்திடம் பல தடவைகள் கதைத்தும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இழப்பீட்டை வழங்கி எங்களை திசை திருப்ப பார்க்கின்றார்கள்.

இங்கே ஒன்றும் நடக்கவில்லை என்று காட்டும் வகையிலும் ஐ.நாவிற்கு தமது அறிக்கைகளை வழங்க காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு இழப்பீடு வழங்க முயற்சிக்கின்றனர். நாங்கள் இழப்பீட்டிற்காக இவ்வளவு காலமும் போராடவில்லை. எமது உறவுகளுக்காகவும் அத்தனை உயிர்களுக்காகவுமே நாங்கள் போராடி வருகிறோம் என மேலும் தெரிவித்தார். (4,6,285)

# பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் மற்றும் வடமராட்சி வடக்கு கலாசார பேரவை இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா-2022 நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை புற்றளை கலாசார மத்திய நிலையத்தில் கலாசாரப் பேரவை தலைவரும் பிரதேச செயலாளருமான ஸ்ரீஆழ்வாப்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருதுந்தினராக வடக்கு மாகாகண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி இராஜமல்லிகை சிவசுந்தரசர்மா கலந்து கொள்ளவுள்ளார். (4,6)

# மருந்துகளுக்குத் தட்டுப்பாடு; மட்டுப்படுத்தப்பட்டது அறுவை சிகிச்சைகள்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள முக்கிய மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் உபகரணங்களின் கடுமையான தட்டுப்பாடு காரணமாக, தினசரி செய்ய திட்டமிடப்பட்ட அறுவை சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறான சத்திர சிகிச்சைகளை மட்டுப்படுத்த அல்லது ஒத்திவைக்குமாறு விசேட மருத்துவர்களுக்கு அறிவித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வலி நிவாரணிகள், தொற்று நோய்களுக்கான எளிய மருந்துகள் முதல் உயிர்காக்கும் மருந்துகள் வரை பிரதான மருத்துவமனைகளில் தற்போது மருந்துகள் தட்டுப்பாடு நிலவுவதாக சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

பொதுவாக, பெரிய மருத்துவமனைகளில் சுமார் ஒரு மாதத்திற்கு போதுமான மருந்து இருப்பு இருக்க வேண்டும். ஆனால் சில மருத்துவமனைகளில் மூன்று முதல் நான்கு நாட்களுக்கு போதுமான மருந்துகளே உள்ளன. (நி)

### சிங்கப்பூரில் அமுல்படுத்தப்படும்

# போதை சட்டங்களை இலங்கையில் அமுலாக்குங்கள்

## எதர்க் கட்சித் தலைவர் சஜித்

போதைப்பொருள் பரவலை ஒழிப்பதற்கு சிங்கப்பூரில் அமுல்படுத்தப்படும் சட்டங்கள் இலங்கையிலும் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று நாவுலவில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாடும் பாடசாலை முறையும் போதைப்பொருளால் நிரம்பியுள்ளதாகவும், நாட்டின் சட்ட முறைமைகள் திருத்தப்பட்டு நீதித்துறை உடனடியாக பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)

# யாழ்.ஓ.எம்.பி அலுவலகத்தில் பதிவுகள் நேற்று முன்னெடுப்பு

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பதிவுகள் நேற்றுப்புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் இந்த பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

காணாமல் போன ஆட்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நிறுவனத்தின் ஓ.எம்.பி. அலுவலக அதிகாரிகளினால் மாவட்டங்கள் தோறும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதனொரு கட்டமாக யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்ளப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் குறித்த பதிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக எதிர்ப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது. (4-6-33)

# நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ, நத்தார் வழிபாடுகள் நடைபெறும் தேவாலயங்கள் மற்றும் மக்கள் கூடும் நகரங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ம-7)

# ஐஸ் போதை தொடர்பில் சுமார் 6 ஆயிரம் பேர் கைது

ஐஸ் போதைப்பொருள் தொடர்பில், 2022ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 6,000 க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதே காலகட்டத்தில் 377 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டமை, தொடர்பில், 2022 ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான காலப்பகுதியில் 67,900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்,

இது, 2021ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 77.8 சதவீத அதிகரிப்பாகும்.

தரவுகளின்படி, கைது செய்யப்பட்ட 67,900 பேரில் 35,765 பேர் ஹெரோயின் போதைப் பொருட்களுக்காகவும், 25,114 பேர் கஞ்சாவுக்காகவும், 6,728 பேர் ஐஸ் போதைப்பொருள் தொடர்பிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த, மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** J.K.W.S.S.P Site Office தாளையடி, மருதங்கேணி (தாளையடி) ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

– சிம்மன்ஸ்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# கண்ணன் தூது சென்றதால்தான் பாரதப் போரில் பாண்டவர் வென்றனர்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் பொருட்டு ஆட்சியாளர்களுக்கும் தமிழ்த் தரப்புகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை முளை கட்டியுள்ளது.

இதில் பேச்சுவார்த்தை வெற்றி பெற வேண்டுமாயின், வெளிநாட்டு அனுசரணை அல்லது மத்தியஸ்தம் தேவை என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

இந்த முன்வைப்பை தமிழ்த் தரப்புகள் பிரேரிக்கின்றன.

கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, வெளிநாட்டு அனுசரணை அல்லது மத்தியஸ்தம் தேவை என்ற கருத்தை தமிழ் மக்கள் முன்வைக்கின்றனர்.

இவ்வாறு வெளிநாட்டு அனுசரணை எனக் கூறும்போது, நோர்வேயின் அனுசரணையுடன் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் முன்னிலையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தனவே என்று யாரேனும் கூறலாம்.

அவ்வாறு குறிப்பிட்டுக் கூறுவதில் நியாயமும் உண்டு.

இங்குதான் வெளிநாட்டு அனுசரணை என்ற விடயத்தில் அனுசரணை வகிக்கக் கூடிய நாடு என்பதும் அது தொடர்பில் ஏற்பாட்டாளராக இருக்கக்கூடியவர் யார்? என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

உண்மையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில், இந்தியா அல்லது அமெரிக்கா அல்லது பிரிட்டன் போன்ற நாடுகளில் ஏதாவதொன்று ஏற்பாட்டாளராக அல்லது அனுசரணையாளராகச் செயற்பட்டிருந்தால், அந்தப் பேச்சுவார்த்தை நிச்சயம் வெற்றி கண்டிருக்கும்.

அவ்வாறு வெற்றி கிடைக்காமல் போயிருந்தால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை அரசாங்கம் தோல்வி கண்டிருக்கும்.

என்ன செய்வது உலக நாடுகளில் மிகவும் அமைதியானதும் அதட்டவும் அடக்கவும் தெரியாததுமான நோர்வே நாடு அனுசரணைப் பணியில் இறங்கியதன் காரணமாக பேச்சுவார்த்தையும் தோற்று தமிழ் மக்களின் பலமும் இல்லாது போனது.

ஆம், பஞ்சபாண்டவர்களின் வெற்றி என்பது குருசேத்திரப் போர்க்களத்தில் ஏற்பட்ட வெற்றியன்று.

மாறாக, துரியோதனனிடம் கண்ண பரமாத்மாவைத் தூது அனுப்பியதுதான் பாண்டவர்களின் வெற்றிக்கு மூலகாரணம்.

ஆக, மகாபாரதம் நமக்கு கூறுவது; சமாதானத்துக்கான தூதுவன் என்போன் சமாதானத்தைக் குழப்புவோரை அதட்டவும் அல்லது அடக்கவும் கூடிய வல்லமை உடையவராக இருக்க வேண்டும்.

அப்போதுதான் ஒன்றில் பேச்சுவார்த்தை வெற்றி பெறும். அல்லது பாதிக்கப்பட்ட தரப்பு வெற்றி பெறும்.

எனவே இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய பேச்சுவார்த்தையில் வல்லமை படைத்த நாட்டின் அனுசரணை இருந்தால் மட்டுமே அது வெற்றியைத் தரும்.

இதையே மகாபாரதத்தில் கண்ணன் தூது நமக்கு உணர்த்தி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## உடனடி சேவை

A/C, fridge, washing machine, air cooler, water heater தரமான உதிரிப்பாகங்களுடன் Spot Service

**076 034 0301**

(சி-5567)


## 45 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பீடி இலைகள் பறிமுதல்

(சென்னை)

தூத்துக்குடியில் இரு ந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 45 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பீடி இலைகளை கியூ பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். தூத்துக்குடி புல்லாவெளி கடற்கரையில் நேற்று புதன்கிழமை கியூ பிரிவு பொலிஸார் சிறிய ரக லொறியை சோதனையிட்டனர்.அதில். சுமார் 1½ தொன் எடையுள்ள பீடி இலைகள் இருந்தன. இதையடுத்து லொறி மற்றும் பீடி இலைகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர். கைப்பற்றப்பட்ட பீடி இலைகளின் மதிப்பு 45 இலட்சம் ரூபாய் ஆகும். (நி)


# கேள்விப்பத்திரம் கோரல்

## யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்(வ.து)

### கடைத்தொகுதி வாடகைக்கு விடுதல், நிலம் குத்தகைக்கு வழங்குதல்

எமது சமாச வளாகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள அரை நிரந்தரக் கட்டடக் கடைத் தொகுதிகளை வாடகைக்கு வழங்குவதற்கும் இக்கடைத்தொகுதிகளுக்கு அருகாமையிலுள்ள நிலத் துண்டுகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் சமாச பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு கடைத்தொகுதிகளைப் பார்வையிடலாம். அலுவலக நேரத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் "கடைத்தொகுதிக்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 31.12.2022 ஆம் திகதிக்கு முன் தலைவர், யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம்,இல.95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் நிராகரித்தல் தொடர்பில் சமாசத்தின் பணிப்பாளர் சபையின் முடிவே இறுதியானதாகும்.

தலைவர்,
யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து)
யாழ்ப்பாணம்.
22.12.2022


(சி-5572)


# மரண அறிவித்தல்

## இராசரெத்தினம் பாஸ்கரன்

### (முன்னாள் அனலைதீவு ப.நோ.கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26.09.1950 | 20.12.2022 |



யாழ்.காரைநகர் சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட இராசரெத்தினம் பாஸ்கரன் 20.12.2022 அன்று சிவன் பாதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற இராசரெத்தினம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் தவமணி (குமரகோட்டம்) தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபூசணியின் அன்புக் கணவரும் சிறிகரன், தர்சிகா, புவிகரன், சசிகரன், திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலதாசனின் அன்பு மாமனாரும் கஸ்மிதா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் உமா (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியர்)வின் அன்புச் சகோதரனும் சிவகுமாரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.12.2022) வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.228.ஸ்ரேசன் வீதி, (சிவபூமி பாடசாலை முன்பாக)
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
077 768 2543
077 288 0152

(13846)

தகவல்-
குடும்பத்தினர்.

# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

திதி - கார்த்திகை மாத அபரபக்க திரியோதசி

கடந்த 22.11.2022 செவ்வாய்க்கிழமை
சிவப்தமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர். விநாயகமூர்த்தி கனகம்மா



31 ம் நாள் ஆனாலும் ஆறுதடியவில்லை எம்மால்.
உங்களை இழந்த துயரை ஈடு செய்ய இயலாமல் தவிக்கின்றோம்.
எங்கள் குடும்பத்தின் பாசத் தலைவியாய் திகழ்ந்த அன்புத் தெய்வமே
எங்களின் வழிகாட்டியாய் வாழ்ந்து அன்பையும் அரவணைப்பையும் தந்து
இன்று எங்களை தவிக்கவிட்டு அமைதியாய் விண்ணுலகு சென்றீர்களே
உன் பரிசத்தின் உரசலின்றி 31 நாட்கள் கடந்ததுவே.
நினைவுகள் நதியாய் நீள நினைந்திருப்போம்.
காலமெல்லாம் எம்மோடு கலந்தே வா அம்மா...

எம் குடும்பத் தலைவி அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலிக்கான நிகழ்வு 22.12.2022 வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும்.
அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் சபீண்டிகரணக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெற்று தொடர்ந்து மதியபோசன நிகழ்வு 12.30 மணியளவில் தேவா மணிமண்டபம் (அரசடி-கரவெட்டி)யில் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-5569)

சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி வடக்கு,கரவெட்டி.

குடும்பத்தினர்.
T.P– 076 926 2835, 077 253 4436

# இராசிபலன்

22.12.2022
மார்கழி 07, வியாழக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 06.33 மணிவரை

கேட்டை பின்னிரவு 04.19 மணிவரை
சுபநேரம் -07.55-09.25 மணிவரை
இராகுகாலம் - 01.55-03.25 மணிவரை

போதாயன அமாவாசை
சந்திராஷ்டமம் - கார்த்திகை

**வளவன்**




உடல்நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள், யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், வேலைச்சுமை அதிகரிக்கும், கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.




பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், மற்றவர்களின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் பகை மாறும்.




தேவைகள் பூர்த்தியாகும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பு உயரும் நாள்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் வாய்ப்புண்டு.




பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன சுகமுண்டு, பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.




பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.




ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் பகை அகலும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், செயற்பாடுளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.




நன்மைகள் நடைபெறும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.




உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, உடல்நலனில் சிறு இடையூறுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.




திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், எதிர்காலம் குறித்து முடிவுகள் எடுப்பீர்கள், தடைகள் விலகும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.

## அனைத்து...

யம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் விடுதிகள் மற்றும் விருந்தகங்களில் மதுபானம் பரிமாறுவதற்கு தடை இல்லை என அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## வடமராட்சி...

குறித்த சடலம் மீனவர்களுடையதா? அல்லது விபத்துக்களில் ஏற்பட்ட உயிரிழப்பா? என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது.

சடலத்தின் தலைப்பகுதியில் மண்டையோடு மட்டுமே எஞ்சியுள்ளதால் அடையாளம் காண சிரமமாக உள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,60,104)

## யாழ்.மாநகர...

யாழ்.மாநகர சபையின் 2023 ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நேற்று புதன்கிழமை மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவாக 11 வாக்குகளும் எதிராக 18 வாக்குகளும் பதிவாகின. ஈழமக்கள் ஜனநாயக கட்சி வெளிநடப்பு செய்தது டன் வாக்கெடுப்பு இடம்பெற்றபோது பங்கேற்கவில்லை. 45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் யாழ்.மாநகர சபையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 16 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் 13 உறுப்பினர்களும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் 10 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 3 உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும் மற்றும் தமிழர். விடுதலைக் கூட்டணி சார்பில் ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## பளையில் இ.போ...

படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த அரச பேருந்தே இவ்வாறு பளை முள்ளையடி பகுதியில் விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது பெண் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இச்சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60,100,104,316)

## சரணடைந்த...

கடமை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனை நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் அல்லது அவருக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று இராணுவத்துக்கு வவுனியா மேல் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு தொடர்பில் கருத்துரைக்கும்போதே கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அல்லது சரணடைந்திருந்த பின்னர் அல்லது கைது செய்யப்பட்ட பின்னர் எழிலன் காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவருக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டியதும் இராணுவத்தினரின் கடமைப்பாடு.

அது தொடர்பில் போதிய விளக்கத்தை இராணுவத்தினர் நீதிமன்றத்திடம் முன்வைக்க வேண்டும். அந்தக் கடமையிலிருந்து இராணுவத்தினர் ஒருபோதும் விலக முடியாது" என்றார். (ம-7)

## ஐந்து நாட்களு...

ஜனவரி முதலாம் திகதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இன்று 2 மணி நேரமும் 20 நிமிடங்களும் மின்வெட்டினை அமுல்படுத்த பொதுப் பயன்பாடு ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது. (ம-7)

## தமிழ்க் கட்சி...

பிலான கூட்டமாக இது அமைந்தது.

அரசியல் கைதிகளில் ஐவரினை விடுவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டதாக சட்டமா அதிபர் கூறியுள்ளார்.

படையினர் கட்டுப்பாட்டில் உள்ள சில நிலங்களினை விடுவிப்பது தொடர்பிலும் பிரேரிக்கப்பட்டது. இது தொடர்பிலான தீர்மானம் எதிர்வரும் மூன்றாம் திகதி தேசிய பாதுகாப்புச் சபை கூடிய பின் முடிவுகள் எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 5ஆம் திகதி சந்திப்பு ஒன்று இடம்பெறும். மீள 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை கூடி அரசியல் அமைப்பு விடயம் தொடர்பாக கலந்துரையாட இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## உள்ளூராட்சி...

ஆணைக்குழுவிடம் காணப்படுகின்றது.

அதற்கான நடவடிக்கைகளும் தேர்தல் ஆணைக் குழுவால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இடம்பெறமாட்டாது என தெரிவித்துள்ளார். (ம-7)

## நீதி...

பீரியலில் நடைபெற்ற கொழும்பு மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வழக்கு விசாரணைகள் தாமதமாகுதல், இதனால் அதிக செலவுகளை சுமக்க வேண்டிய நிலை காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படுதல் ஆகியன விரைவில் முடிவுக்கு வரவேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மேல் நீதிமன்றத்தின் வகிபாகம் மற்றும் நீதி நிலைநாட்டுவதை விரைவுபடுத்துதல் தொடர்பான அணுகுமுறை ஆகியவற்றைத் தீர்மானிக்கும் மையமாக மேல்நீதிமன்றமே காணப்படுவதாகவும் தெரிவித்தார். (ம-7)

# கைபேசி சார்ஜரால் தீப்பிடித்த சொகுசு வான்

(கொழும்பு)

வாத்துவ நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு வான் ஒன்று தொலைபேசி சார்ஜரில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக தீப்பிடித்து எரிந்ததாக வாத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை நகர சபையின் தீயணைப்பு வாகனம் வருவதற்குள் பிரதேசவாசிகள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

சாரதி தனது கைபேசியை சார்ஜ் செய்வதற்காக பொருத்திவிட்டு, அருகில் உள்ள கடைக்கு சென்றபோது தீ பரவியது.

எனினும், சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1431
வெற்றி இலக்கங்கள்
கடகம் 3 4 6 1 2 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1006
C 12 18 41 64
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.21
சீட்டிழுப்பு இலக்கம் 3218
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
D 14 27 63 68
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 21/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1324
U 08 24 25 35 43

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.21
சீட்டிழுப்பு இலக்கம் 285
கன்னி 11 17 41 42 கன்னி
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/21
சீட்டிழுப்பு இலக்கம் 4976
P 5 7 6 3 6 0
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1951
சீட்டிழுப்பு திகதி 2022.12.21
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்கிழமை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,870,280/-
L 01 31 48 73
5917 738

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,959,470.40
திகதி 2022-12-21
வெற்றி வாரம் 3663
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 03 26 44 49
மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,870,800/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.21
சீட்டிழுப்பு இல : 4112
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,790,120/-
வெற்றி இலக்கங்கள் 09 13 51 56
F

28
M 26 08 11 22 27
சீட்டிழுப்பு வாரம் 1127
வர்ணம் பச்சை
திகதி 2022.12.21 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 287,801,189.80
தொலை பேசி : 0112 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1881
சீட்டிழுப்பு திகதி 2022-12-21
வெற்றி இலக்கங்கள் 36 44 51 60 G
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 38,168,560/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1777
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.12.21
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,812,600/-
வெற்றி இலக்கங்கள் 08 21 63 70 T


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

பருத்தித்துறையில் இயங்கிவரும் பிரபல திருமண மண்டபத்திற்கு (சூரிய மஹால்) திருமண மண்டப மேற்பார்வையாளர், உதவிக் கணக்காளர், காசாளர் தேவை.
அத்துடன் சண்டிஜிற்றல் ஸ்ரூடியோவிற்கு படப்பிடிப்பாளர் தேவை.

**076 704 6623**
**077 881 1530**
**077 704 6623**

(C-5573)

## கண்ணீர் அஞ்சலி



அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயத்திற்கு பல வழிகளிலும் ஆலய வளர்ச்சிக்கு உதவி புரிபவரும் வருடாந்த மாதாந்த பூசை உபயகாரருமான

திரு.
**சின்னத்தம்பி பரம்சோதி**
(குடியேற்ற உத்தியோகத்தர் துனுக்காய்)

பிறப்பு 26.09.1931
இறப்பு 21.12.2022

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (13859)

அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலய பரிபாலன சபையினர்,
அணிஞ்சியங்குளம், மல்லாவி, யோகபுரம். T.P:077 390 2119

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13838)
**076 825 7716** (ஆகாஸ்)

## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள் தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப் பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது.
தங்குமிட வசதி உண்டு.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே இல.
**077 706 7698**
(C-5571)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

TVS SCOOTY Pep + (BBG)
RANAMOTO patiya (BEF)

தொடர்பு (13857)
**075 887 5036**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**
(C-5576)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • முருங்குயூர்ந்து • கத்தோலாவை

• பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-
• பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
• பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
• வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். **0777-068-777**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




(C-5576)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நவக்கிரிப் பகுதியில் வீட்டுடன் கூடிய 6 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (13843)
**077 327 6363**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை **675,000** ரூபாய் மட்டும்

தரகர் தேவையில்லை (13857)

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
**077 814 7389, 077 986 5457**

## மரண அறிவித்தல்

மலர்வு
22
.
10
.
1943



உதிர்வு
20
.
12
.
2022

### திருமதி தவமணி தவராசா

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் தெஹிவளை, குறுக்கு வீதி நீர்வேலி ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தவமணி தவராசா அவர்கள் 20.12.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற க.தவராசாவின்(முன்னாள் நீதிமன்ற பதிவாளர்) அன்பு மனைவியும் நாகரட்ணம்(சேவியர்), செல்வச்சந்திரன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமைதிலி(சுவிஸ்), தவப்பிரியா(ஆசிரியர், அச்சுவேலி மத்திய கல்லூரி), திலீபன்(அவுஸ்திரேலியா) அன்புத் தாயாரும் விஜேந்திரா(சுவிஸ்), இராகுலன்(யாழ். பல்கலைக்கழக ஊழியர்), சுதர்சினி(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜொலிற்றா(சுவிஸ்), ஆதவன், ஆருதி(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை (22.12.2022) அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக சியாக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:-
பா.இராகுலன்
070 787 2828

(13845)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 82 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தரகர் தேவையில்லை (13857)

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
**077 986 5457, 077 814 7389**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.